# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 130/2025**

**Prosecution witness : அ.சா. 10** **Date : 25.08.2025.**

| Name : பிரசாந்த் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பூரல்கோட்டையில் குடியிருந்து பெயிண்டராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். மதியழகன், மாதேஷ்வரி இருவரையும் தெரியுமா என்றால் தெரியும். இரண்டு குடும்பத்தாருக்கும் சண்டை நடந்ததாக தெரிந்து கொண்டேன். அந்த வழக்கு சம்மந்தமாக ஒரு மாதம் முன்பாக போலீசார் ஆஜர் எதிரியின் வீட்டிற்கு வந்து படம் வரைந்தார்கள். பக்கத்தில் யார் யார் வீடு உள்ளது என்று எழுதி கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.5** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர். **சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) மதியழகன், மாதேஷ்வரி இருவரும் எனக்கு உறவினர்களா என்றால் ஆமாம். மதியழகனின் முதல் மனைவி பெயர் மாதேஷ்வரி என்றால்

கேள்விப்பட்டிருக்கிறேன். மாதேஷ்வரி குழந்தை இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இரண்டாவதாக குணவதி என்பவரை மதியழகன் திருமணம் செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. சாருலதா என்ற பெண் குழந்தை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) போலீசார் விசாரணையில் குணவதி என்பவர் கோவித்துகொண்டு தற்கொலை செய்து கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். தங்கவேல் குடும்பத்தாருக்கும், மதியழகன் குடும்பத்தாருக்கும் பிரச்சனை ஏற்பட்டு மதியழகன் மற்றும் சாருலதா அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரி தங்கவேல் சாருலதாவை திருமணம் செய்ய வற்புறுத்தியதாகவும், 2ம் மனைவி குணவதி பூச்சி மருந்து குடித்து இறந்தது சம்மந்தமாக புகார் கொடுத்தார் என்பதை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் கேள்விப்பட்டதாக போலீசாரிடம் சொல்லியுள்ளேன்.

4) சேலம் குழந்தை நல அமைப்பு மூலம் 01.02.2025ம் தேதி மதியழகன் வீட்டிற்கு வந்து விசாரித்து வைத்துள்ளதாகவும் 02.02.2025ம் தேதி மாலை 4 மணியளவில் நான் என்னுடைய வேலை சம்மந்தமாக மதியழகன் வீட்டிற்கு அருகில் இருந்த போது தங்கவேல், யமுனா, முனுசாமி ஆகியோர் மதியழகன் வீட்டிற்கு முன்பு வந்து எதிரி தங்கவேல் புகார்தாரரை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டி தங்கவேல் கையால் மதியழகனின் வாய் மற்றும் தலை மீது குத்தி கீழே தள்ளிவிட்டதாகவும் அங்கிருந்த எதிரி முனுசாமி காலால் மதியழகனின் இடுப்பில் எட்டி உதைத்ததாகவும் அதை தடுக்க சென்ற சாருலதாவை எதிரி யமுனா தலையை பிடித்து அருகில் இருந்த சுவற்றில் முட்டி கீழே தள்ளி காலால் எட்டி உதைத்ததை நான் நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை.

5) இரண்டு பேரும் வலி தாங்க முடியாமல் சத்தம் போட்ட போது மதியழகனின் முதல் மனைவி சண்டையை தடுக்க வந்தார் என்றும் எதிரி யமுனா காலால் அவரையும் வயிற்றில் எட்டி உதைத்து கீழே தள்ளினார் என்றும் அதில் அவருக்கு வலது கண் புருவம், வலது கன்னத்தில் அடிப்பட்டது என்றும் யமுனா

மாதேஷ்வரி முதுகில் காலால் எட்டி உதைத்ததாகவும் நானும் அருகிலிருந்தவர்களும் வருவதை பார்த்த எதிரிகள் குடும்பத்தார் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும் அருகிலிருந்தவர்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போது எதிரி முனுசாமி அரிவாளுடன் வந்து மதியழகன் குடும்பத்தாரை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாக போலீசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலீசார் படம் வரைந்ததில் உள்ள விவரங்களை எனக்கு படித்து காட்டிய பிறகு தான் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிகளுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.